2090

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2017

| தரம் 8 | வரலாறு | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. இலங்கைத் தொழினுட்பவியலாளருக்கே உரித்தான ஆக்கம் என ஏற்றுக் கொள்ளப்பட்ட குளத்தின் பகுதி
   1) கலிங்கல் 2) அலைதாங்கி 3) கலிங்கல் தொட்டி 4) வான்கதவு

02. புத்தருடைய முன்னைய பிறப்பாகக் கருதப்படுவது
   1) சித்தார்த்தன் 2) போதிசத்துவர் 3) மார்த்தாண்டர் 4) தேவநம்பிய

03. கோட்டை இராச்சியமானது கோட்டை, றைகம, சீதாவாக்கை என மூன்று அரசுகளாக பிரிக்கப்பட்ட போது கண்டியின் அரசனாக விளங்கியவன்
   1) கரலியத்த பண்டார 2) ஜயவீர பண்டார
   3) யமசிங்க பண்டார 4) சேனாசம்மத விக்கிரமபாகு

04. வெள்ளரசு மரத்தின் பாதுகாப்பிற்கும் அலங்காரத்திற்கும் அதனைத் தரிசிக்க வருவோரின் வசதிக்குமாக அமைக்கப்பட்ட கட்டடம்
   1) தூபிமனை 2) சிலைமனை 3) விஹார ஆராமை 4) போதிமனை

05. “இலங்கையின் புராதன நீர்ப்பாசனம்” என்னும் நூலின் ஆசிரியர்
   1) மகாநாமதேரர் 2) புத்தகோஷதேரர் 3) புரோகஹியர் 4) வாமதேவர்

06. கோள் மண்டலத்தில் அனைத்துக் கோள்களும் நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வலம் வருவதாக கூறியவர்
   1) ஜொஹென்னஸ் கெப்லர் 2) நிக்கலஸ் கொப்பர்னிகஸ்
   3) கலிலியோ கலிலி 4) மைக்கல் சர்வேஸ்

07. வம்சக் கதைகளின் படி ஏழு மாடிகள் கொண்ட “வைஜயந்த” என்னும் கட்டடத்தினை அமைப்பித்த பொலன்னறுவை ஆட்சியாளன்
   1) மகா பராக்கிரமபாகு 2) முதலாம் விஜயபாகு
   3) ஆறாம் பராக்கிரமபாகு 4) நிஸங்க மல்ல மன்னன்

08. ஓவியம் சிற்பக்கலை, கட்டடக் கலைகளில் சிறந்து விளங்கிய மறுமலர்ச்சிக்கால கலைஞர்
   1) லியனாடோ டாவின்சி 2) மைக்கல் ஆஞ்சலோ
   3) வில்சியம் ஷேக்ஸ்பியர் 4) இராஸ்மஸ்

09. கால்வாய் ஆரம்பமாகும் இடத்தில் இருந்து முதல் 17 மைக்கல் வரை ஒவ்வொரு மைல் தூரத்திற்கும் ஒரு அங்குலம் சாய்வினை உள்ளடக்கி அமைக்கப்பட்ட நிர்மானத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு
   1) ஜயகங்கை கால்வாய் 2) எலஹர கால்வாய்
   3) தல்வத்துக் கால்வாய் 4) மினிப்பே கால்வாய்

10. தொல்பொருள் அகழ்வாராட்சியின் போது ஏறத்தாழ 40 ற்கும் மேற்பட்ட பொய்கைகள் கண்டறியப்பட்ட இடம்
   1) அபயகிரி அகழ்வு 2) ரஜகல் அகழ்வு
   3) மஹாவிகாரை அகழ்வு 4) ஜேத்தவன ராமய அகழ்வு



kalvi.lk

11. நிரல் "அ" வில் விகாரைகளும் நிரல் "ஆ" இல் அதனை அமைப்பித்தவர்களும் தரப்பட்டுள்ளன. அவற்றினை தொடர்பு படுத்தி சரியான விடையினைத் தெரிவு செய்க.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1) அபயகிரி | A. தேவநம்பிய திஸ்ஸன் |
| 2) ஜேதவனாராம | B. துட்டகைமுனு |
| 3) தூபராம | C. வலம்பாகு |
| 4) ருவன் வெலிசாய | D. மகாசேனன் |

1) CDAB 2) BADC 3) CABD 4) DABC

12. போர்த்துக்கேயரை வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்ட மன்னன்
1) முதலாம் விமலதர்ம சூரியன் 2) செனரத் மன்னன்
3) இரண்டாம் இராஜசிங்கன் 4) ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்

13. மண்ணின் மீது கற்றூண்களை நட்டு அவற்றுடன் மரத்தூண்களைப் பொருத்தி அதன் மீது கட்டப்பட்ட விகாரை
1) டெம்பிட்ட விகாரை 2) லங்கா திலக விகாரை
3) தெல்கமுவ விகாரை 4) அபயகிரி விகாரை

14. மட்பாண்டம் உற்பத்தி செய்வதில் நிபுணத்துவம் பெற்ற குயவர் குலங்கள் இலங்கைக்கு வருகை தந்தது.
1) விஜயனின் வருகையுடன் 2) சங்கமித்தையின் வருகையுடன்
3) மகிந்ததேரர் வருகையுடன் 4) பண்டுவாசு தேவன் வருகையுடன்

15. கண்டி இராச்சியத்தில் புதிய அரச பரம்பரை ஒன்றினைத் தோற்றுவித்த அரசன்
1) சேனாசம்மத விக்கிரமபாகு 2) ஜோதிய இளவரசன்
3) முதலாம் விமலதர்ம சூரியன் 4) ஸ்ரீ விஜய இராஜசிங்கன்

16. முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் குளங்கள் நிர்மாணிக்கப்பட்டதாக குறிப்பிடும் இலக்கியம்
1) மகாவம்சம் 2) தீபவம்சம் 3) தாதுவம்சம் 4) போதிவம்சம்

17. அம்பன் கங்கைக்கு குறுக்காக அணைகட்டி அதிலிருந்து வடதிசைக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட கால்வாய்
1) திலகவத்துக கால்வாய் 2) யோத எல கால்வாய்
3) ஆலிசார கால்வாய் 4) பப்பதன்ன கால்வாய்

18. சந்திரவட்டக்கல்லின் இறுதி வரிசையில் அமைந்து காணப்படும் உருவம்
1) யானை, குதிரை 2) தீச்சுவாலை, பூவிதழ்
3) மலர்ந்த தாமரைப்பூவின் இதழ் 4) தாமரை மொட்டும் மலர்க்கொடியும்

19. சமயச் சார்பற்ற கட்டிடத்திற்கு எடுத்துக்காட்டாக அமையக் கூடியது.
1) போதிமனை 2) சிலைமனை 3) தூபி மனை 4) அரண்மனை

20. கல்வெட்டுக்களில் "கபர" என்னும் பதம் மூலம் குறிக்கப்பட்டவர்களின் தொழில்
1) இரும்புக்கைத்தொழில் 2) மட்பாண்ட கைத்தொழில்
3) தங்க கைத்தொழில் 4) இரத்தினக்கல் கைத்தொழில்

(20X2=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ 1ம், 2ம், வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01.

1) இரண்டாம் தவணையில் வரலாற்றுப்பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டுக் கருவிகள் இரண்டினையும் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)
2) அக்கணிப்பீடுகளை மேற்கொண்ட பாட அலகுகள் எவை? (3 புள்ளிகள்)
3) அக்கணிப்பீட்டினை மேற்கொள்ள நீர் பயன்படுத்தி தர உள்ளீட்டுப் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)
4) அக் கணிப்பீடுகளை மேற்கொண்டதால் நீர் பெற்ற பயன்கள் இரண்டினைத் தருக? (4 புள்ளிகள்)

02. தரப்பட்ட இலங்கைப்படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| 1) கண்டி | 5) கோட்டை | 9) அனுராதபுரம் |
| 2) பொலன்னறுவை | 6) சிகிரியா | 10) மிகிந்தலை |
| 3) சீதாவாக்கை | 7) றைகம | 11) யாழ்ப்பாணம் |
| 4) மகாவலிகங்கை | 8) அம்பன்கங்கை | 12) திருகோணமலை |

(12 புள்ளிகள்)

03.

1) பாரிய குளங்களிற்கு உதாரணம் இரண்டு தருக? (2 புள்ளிகள்)
2) நீர்த் தொழிநுட்பம் என்றால் என்ன என்பதனை வரையறை செய்க? (3 புள்ளிகள்)
3) கால்வாய்களை அமைப்பதற்கான தேவைகள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)
4) பொய்கைகளின் வகைகள் நான்கினைக் குறிப்பிட்டு அதன் நோக்கத்தினைத் தெளிவு படுத்துக? (4 புள்ளிகள்)

04.

1) இராசரட்டைக் காலத்திற்குரிய கட்டிட நிர்மாண வகைகள் இரண்டையும் குறிப்பிடுக? (5 புள்ளிகள்)
2) பின்வரும் சமயக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கங்களை வரையறுக்குக.
   a) தூபிமனை :- ……………………………..
   b) சிலை மனை :- ……………………………..
   c) போதிமனை :- …………………………….. (3 புள்ளிகள்)
3) புரதான காலத்தில் அமைக்கப்பட்ட மலசல கூடங்களில் காணப்படும் இரு அம்சங்களைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக? (3 புள்ளிகள்)
4) அனுராதபுர கால விஷேடமான அரண்மனைத் தொகுதிகளில் ஒன்றாக விளங்கும் சிகிரியாவில் காணப்படும் முக்கிய கட்டுமானங்கள் நான்கினைக் கூறி விளக்குக? (3 புள்ளிகள்)

05.


1) கண்டி நகரினுள் பிரவேசிக்க உதவிய பாதைகள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)
2) கண்டி இரட்சியத்தின் மறுபெயர்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)
3) கண்டி இராட்சிய மக்களின் பொருளாதார நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)
4) கண்டியை ஆட்சி செய்த நாயக்க வம்ச மன்னர்கள் நால்வரையும் எழுதுக? (4 புள்ளிகள்)

06.

1) மறுமலர்ச்சிக்கால நூல் ஆசிரியர்கள் இருவரை எழுதுக? (2 புள்ளிகள்)
2) புவி தொடர்பான புதிய கொள்கைகளை முன்வைத்த மூவரை எழுதுக? (3 புள்ளிகள்)
3) மறுமலர்ச்சிக் காலத்தில் பின்வரும் பல்கலைக் கழகங்கள் அமைந்து காணப்பட்ட நாடுகளை எழுதுக?
   a) பொலஞ்ஞோ :- ……………………………..
   b) ஒக்ஸ்போட் :- ……………………………..
   c) பரிஸ் :- …………………………….. (3 புள்ளிகள்)
4) மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)



kalvi.lk





kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457